Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி 24 (08 - 07 - 1991) திங்கட்கிழமை ஓசை: 140

## கால எல்லை நீடிக்கப்படமாட்டாது

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் தற்காலிகமாக தங்கியிருப்போர் தம்மைப் பொலிசில் பதிவு செய்து கொள்ள அளிக்கப்பட்டுள்ள 14 நாள் கால எல்லை மேலும் நீடிக்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. இருவாரங்களின் பின் பொலிசார் இதனோடு சம்பந்தப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர் என்றும் (4 ஆம் பக்கம் பார்க்க)

# வன்முறையை கைவிட்டாலே புலிகளுடன் பேச்சுவார்த்தை

## கொள்கையில் மாற்றமில்லை = பிரட்மன்

(கொழும்பு)

வருங்காலத்தில் எந்தவிதமான பேச்சுவார்த்தைகளும் தொடங்குவதற்கு முன்னதாக, அரசியல் நோக்கங்களை அடைவதற்கான வழிகளாக வன்முறை பயன்படுத்தப்பட மாட்டாது என்று விடுதலைப் புலிகள் அறிவிக்க வேண்டும் என்று சிறிலங்கா அரசு தெரிவித்துள்ளது.

எந்த ஒரு முன் நிபந்தனையும் இன்றிப் பகிரங்கமாகப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்காக, விடுதலைப் புலிகள் தலைமையிலிருந்து செய்திகள் வந்திருப்பதாகக் கூறப்படுவதுபற்றிக் குறிப்பிடுகையில் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன், இந்தப் பிரச்சினையில் சிறிலங்கா அரசின் நிலையில் எவ்வித மாற்றமும் இல்லை என்று கொழும்பில் நேற்றுக் கூறினார்.

பேச்சுவார்த்தைகளுக்குக் கதவுகள் என்றுமே திறந்திருப்பதாக அரசு இதுவரையில் கூறியிருப்பதாக அவர் சொன்னார்.

## நிபந்தனையின்றிப் பேச புலிகள் தயார் = கிட்டு



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் நிபந்தனையின்றி சிறிலங்கா அரசாங்கத்துடன் பகிரங்கமாக பேசத் தயாராக இருப்பதாக மீண்டும் தெரிவித்துள்ளனர் என்று கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன

லண்டனிலுள்ள விடுதலைப் புலிகளின் முன்னாள் தளபதி கிட்டு என்ற சதாசிவம் கிருஷ்ணகுமார் இதனைத் தெரிவித்ததாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறிலங்கா மீதான பிரித்தானியாவின் பொருளாதார ஆயுத தடைகள் யுத்தத்தைக் கட்டுப்படுத்தும்

## - பாதுகாப்பு அதிகாரி தகவல்

(கொழும்பு)

சிறிலங்காவுக்கான ஆயுத விற்பனைக்குப் பிரித்தானிய அரசு கட்டுப்பாடு விதித்தமை விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தநடவடிக்கைகளையும் கட்டுப்படுத்தும் என்று கொழும்பில் பாதுகாப்பு அதிகாரிகள் கருத்துத் தெரிவித்துள்ளதாக இஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பிரித்தானிய அரசின் இந்த முடிவினால் ரூபா19 கோடியே 80 லட்சம் நிதி உதவி நிறுத்தி வைக்கப்படுவதுடன், ஆயுதம் மற்றும் ஆயுத உபகரணங்களையும் சிறிலங்கா பெறும் மூலம் தடைப்படும் என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இப்போது இராணுவத்தின் பாதுகாப்புத் தேவைகளுக்கான ஆயுதங்களின் பெரும் பகுதி சீனாவிடமும், பாகிஸ்தானிடமும் இருந்து கொள்வனவு செய்யப்படுகின்றது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டின் நெருக்கடி உச்சநிலை அடைந்துள்ளது

### - பேர்னாட் சொய்சா

(கொழும்பு)

நாட்டின் நெருக்கடி என்றுமில்லாதவாறு அபாயகரமிக்க உச்ச நிலையினையடைந்துள்ளது. இனப் பிரச்சினையினைத் தீர்ப்பதில் மேலும் ஏற்படக்கூடிய சிறிய தாமதம் கூட, நாட்டில் வாழுகின்ற சகல இன மக்களுக்கும், ஈடுசெய்ய முடியாத பேராபத்தினையும் பேரழிவினையும் உண்டு பண்ணிவிடும்.

இவ்வாறு லங்கா சமசமாசக் கட்சியின் சார்பில் அதன் செயலாளர் பேர்னாட் சொய்சா விடுத்த அறிக்கை யொன்றில் தெரிவித்துள்ளார், அவ்வறிக்கையில் மேலும் இன்றைய நாட்டுப் பிரச்சினை குறித்து எச்சரிக்கை செய்ததுடன் அரசாங்கத்தின் தவறு

(4ஆம் பக்கம் பார்க்க)

## பரணி வீர மரணம்

(யாழ்ப்பாணம்)

தலைநகர நேற்றைய தினம் ஏற்பட்ட வெடிவிபத்துச் சம்பவமொன்றில் வீரவேங்கை பரணி (நாகரத்தினம் இன்பதாஸன் இரண்டாம் வட்டாரம், முள்ளியவளை) என்பவர் வீரமரணத்தைத் தழுவியுள்ளார்.

இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

இவர் விடுதலைப்புலிகளின் முன்னிலைஸ்தர் ஜவான் அவர்களின் சகோதரராவார்.

## பருத்தித்துறை கடற்பரப்பில் ரோந்து அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வல்வெட்டித்துறை கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையின் நடமாட்டம் அதிகரித்ததைத் தொடர்ந்து வடமராட்சி மீன்பிடித்தொழில் கடுமையாகப் பாதிப்புற்றிருக்கிறது.

இரவு நேரத்தில் இந்தக் கடற்பகுதியில் சிறிலங்கா கடற்படையின் அப்பாக்கிப் படகுகள் வந்து போவதால் மீனவர்கள் தொழிலுக்குச் செல்ல தயக்கம் காட்டுவதாகவும் இதனால் நன்கு விடிந்ததன் பின்பே தினமும் மீன்பிடித்தொழில் ஆரம்பிக்கப்படுவதாகவும் அங்கு மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் கூறியுள்ளனர். (லேர)

## கண்டியிலும் தகவல் சேகரிப்பு

(கண்டி)

கண்டி நகரில் உள்ள தமிழர் வர்த்தக நிலையங்களிலும், கண்டி பிரதேசங்களில் வாழும் தமிழர் வீடுகளிலும் நிரந்தரமாக வசிப்போர் மற்றும் தற்காலிகமாக வாழ்வோர் பற்றிய பூரணவிபரங்கள் அடங்கிய தகவல்களைப் பொலிஸார் வீடுவீடாகச் சென்று திரட்டி வருகின்றனர்.

## 27 பேர் கொல்லப்பட்டதாக லங்காபுவத் தகவல்

(கொழும்பு)

பொலன்நறுவை மாவட்டத்திலுள்ள எல்லைப்புறக்கிராமமான புதூரில் இருபத்தியேழு பேர் இனந்தெரியாதோரால் வெட்டிக் கொல்லப்பட்டிருப்பதாக லங்காபுவத்செய்தி வெளியிட்டுள்ளது. பொலன்நறுவையில் மகாவலி ஆற்றங்கரையில் இக்கிராமம் அமைந்துள்ளது. இங்கு இருப்பவர்களில் பெரும்பாலனோர் முஸ்லிம்கள் ஆவர். மேலும் இந்தக் கிராமவாசிகள் காட்டுப்புறத்தில் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதாகவும் லங்கா புவத் கூறியுள்ளது.

## சிறிலங்கா எதிர்பார்க்கும் சேபாலாவின் அறிக்கை

(கொழும்பு)

லண்டனிலுள்ள சிறிலங்காவிற்கான உயர்ஸ்தானிகர் ஜெனரல் சேபால ஆட்டிகலவின் விபரமடங்கிய அறிக்கையை சிறிலங்கா அரசு எதிர்பார்க்கிறது.

டேவிற் இளசட்ஸ்ரோன் விவகாரத்தில் பிரித்தானிய அரசாங்கம் எடுத்தமுடிவுகள் பற்றிய பூரண அறிக்கையை அரசு எதிர்பார்த்திருப்பதாக வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## போக்குவரத்துச் சேவை முழுமையாக தனியாரிடம்

(கொழும்பு)

பஸ் போக்குவரத்துச்சேவை எதிர் காலத்தில் முற்றாக தனியார் துறைக்கு உரித்தாக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான தேசிய கொள்கையின் மீது சிறிலங்கா அரசிற்கு ஆலோசனை வழங்க வென தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவொன்று நியமிக்கப் படவுள்ளது.

இதற்கான சட்ட மூலம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பிரபல தவில்மேதை சின்னராசா காலமானார்

ஈழத்தின் பிரபல தவில் மாமேதை இணுவையூர் என். ஆர். சின்னராசா அவர்கள் நேற்று முன்தினமிரவு மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியை ஈழநாதம் வாசகர்களுக்கு கவலையுடன் அறியத்தருகின்றோம். புகழ்மிக்க இசை வேளாளர் குடும்பத்தில் பிறந்த இவர் பிரபல நாதஸ்வரவித்துவான் கோவிந்தசாமி அவர்களின் சகோதரருமாவார். தமிழ்நாட்டின் பிரபல நாதஸ்வர வித்துவான்கள் ஏ. கே. சின்னமௌலானா, காரைக்குறிச்சி அருணாசலம், அவர்களுடன் தவில் வாசித்துப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**தேவை**

நாட்டு (கல்) தேசிக் விதை தேவை. மின்னவற் யாழ்ப்பாணம். (B/2785)

**கல்வி**

G. C. E. (O/L) லில் கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 24 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலத்திற்குள் விசேஷ சித்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (R- 1521)

## நவநீதம்!
### இன்றுமுதல் மலிவு விற்பனை!

வீட்டிற்குத் தேவையான புதிய, பழைய பிளாஸ்டிக், சில்வர், பித்தளைப்பாத்திரங்கள், சேலைகள், உடுபிடவைகள், சட்டைகள், மின்சார உபகரணங்கள், மணிக்கூடுகள் மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டுமே விற்பனை செய்யப்படவுள்ளன.

நவநீதம்
(B/2792) 161, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

## 91ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**கிருஷ்ணபிள்ளை கைலாசவாசன்**
(கைலாஸ், அற்புதன்)

தோற்றம்
10 - 03 - 1964
மறைவு
11 - 04 - 1991

எம் உயிரினும் மேலான செல்வமே!
உமது ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகிறோம்.

அல்வாய் மேற்கு,
திக்கம்.

உமது பாசமுள்ள
தாய், சகோதரர்மார்,
சகோதரிமார், பேரத்தி,
உறவினர்கள், நண்பர்கள்

குறிப்பு: அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (8-7-91) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் என்பதை உறவினர் நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

(B-2781)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி
## புகழ் பூத்த புலி சிவபரன்



தாயின் மடியில்
1969-07-06

தாயக விடிவில்
1990-07-15

திதி:
08-07-1991

யாழ். நாயன்மார்கட்டு - 'ஆரகர் - சிவா'
(இரகுநாதன் சிவபரன்)

புகழ்பூத்த புலியாகிக் களஞ்சென்று போராடிப்
புலிகள் கூட்டம்
இகழ்வோடுன் கைக்குண்டால் வீழ்ந்திடவே செய்தபின்
இம்மண்மீதில்
வாழ்கின்ற பெயர் வைத்துத் தீரனாய்ச் சிவபரனே
சொர்க்கம் சென்றாய்
மகனேயுன் மாவீரம், மறப்பண்பு, புனிதநெறி
மறவோம் ஐயா!

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி

54, அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

உனை நினைந்துருகும்,
அப்பா, அம்மா, அத்தான்மார்,
அக்காமார், மருமணிகள்

(R-1519)

## வருடாந்தப் போட்டிகள்
(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெறும் வருடாந்த வலைப்பந்தாட்ட, கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகள் இந்த மாதம் 18 ஆம் திகதி ஆரம்பமாக விருக்கின்றன என்று யாழ் கல்வித்திணைக்கள உடற்கல்விப் பிரிவு அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதற்கான விண்ணப்ப முடிவு திகதி 10 ஆம் திகதி ஆகும் என்றும் இந்தத்திகதிக்கு முன்பதாக யாழ் கல்வித் திணைக்கள உடற்கல்விப்பிரிவிற்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு சகல பாடசாலைகளையும் அவர் கேட்டுள்ளார்.

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி




**வீரவேங்கை வசந்தன்**
(காசிப்பிள்ளை உதயகுமார்)

தாயின் மடியில்:
29-01-1967

தாயக மண்ணில்:
08-07-1987

திதி: 08-07-1991

குடும்பத்தில் மூத்த புதல்வனாக
பாசம் மிக்க அண்ணனாக
உலகம் போற்றும் உத்தமனாக வாழ்ந்திரே
தாய் நாட்டைக் காத்திடப் புறப்பட்டீரே
அடிமைத் தமிழனாக வாழ்வதைவிட
உரிமைக்காகப் போராடி
மரணித்துப் போய் விட்டீரே
நீர் எம்மைப் பிரிந்து
நான்கு ஆண்டுகள் சென்றுவிட்டன
உமது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கோப்பாய்.

உன் பிரிவால் துயருறும்
அம்மா, சகோதரர்கள்

(R/1503)

## நினைவு கூருகின்றோம்...

1991 - 07 - 08



**அன்பு**

1987ஆம் ஆண்டு இதே தினத்தில், தொண்டமனாற்றில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**வசந்தன்** (காசிப்பிள்ளை உதயகுமார் - கோப்பாய்)

இதே ஆண்டு வீரமரணமெய்திய

❋ **சிறீ** (சிவரத்தினம் கிருஷ்ணதாஸ் - முப்பதேக்கர்)

மன்னார், அடம்பன் பகுதியில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கர்ப்பிணிப் பெண், கணவர், ஏழு வயது மகன், மூதாட்டி ஆகிய 4 தமிழர்கள்

பெலவத்தை சிறிலங்காப்படையினரின் தடுப்பு முகாமில் சுட்டுக் கொல்லப்பட்ட ஒரு மாணவன் உட்பட 2 தமிழ் இளைஞர்கள்

கரவெட்டியில் சிறிலங்காப்படையினரின் எறிகணைத் தாக்குதலால் கொல்லப்பட்ட தமிழ்ப் பெண்

1988ஆம் ஆண்டு பரந்தன் நவஜீவனம் அருகில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

1989ஆம் ஆண்டு நல்லூரில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரமரணமெய்திய

**2ஆம்லெப்.நிக்ஸன்** (ஞானப்பிரகாசம் நிசாந்தன் - 13, மூனாய் வீதி, யாழ்ப்பாணம்)

**அன்பு** (அம்பிகைபாகன் அன்பழகன் - அன்பழகன் வீதி, நாயன்மார்கட்டு)

1990ஆம் ஆண்டு மட்டக்களப்பில் எரிந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்ட 8 தமிழர்கள்

கட்டைபறிச்சான், தோப்பூர், பள்ளிக் குடியிருப்புக்காடுகளில் சிறிலங்காப்படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட பல தமிழர்கள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

❋ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர் சிறீ ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B- 2787)

### சிந்தனைக்கு

செயல் மறக்கப்படலாம்;
ஆனால், அதன் விளைவு தொடர்கிறது;
— ஒவிட்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 08.07.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
தூபெ.எண் 05

# ஜெயலலிதாவை அசட்டை செய்யும் நரசிம்மராவ்

இந்திய மத்திய அமைச்சரவையில் சேர தமிழக ஆளும் கட்சியான அ.இ.அ.தி.மு.க. இந்தியப் பிரதம மந்திரி நரசிம்மராவிடம் தனது விருப்பத்தை வெளியிட்டுள்ளது; ஆனால், புதிய பிரதமர் நரசிம்மராவ் இது தொடர்பாக தமது கட்சி - இ. காங்கிரஸ் - எதுவித முடிவும் எடுக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார்;

கடந்த தேர்தலின்போது இந்திய தேர்தல் வரலாற்றிலேயே எதுவித கூட்டணிகளும் பெறாத வெற்றியை அ.இ.அ.தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி தமிழகத்தில் பெற்றது. இக்கூட்டணி லோக்சபாத் தொகுதிகளில் நூறுவீதமும், சட்டசபைத் தொகுதிகளில் 96 வீதத்திற்கு மேலும் வெற்றியீட்டின.

இந்நிலையில் மத்தியில் அறுதிப் பெரும்பான்மை பெறாமல் சிறுபான்மை அரசாங்கத்தை அமைக்க முற்பட்ட இ. காங்கிரஸ் கட்சியின் தலைவர் நரசிம்மராவ் அ.இ.அ.தி.மு. கட்சியை தமது அரசாங்கத்தில் சேர்த்துக் கொள்வார் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், தமிழகத்தில் அமோக வெற்றி பெற்ற இ. காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு ஒரு கபினெட் அமைச்சர் அந்தஸ்துத்தானும் வழங்காமல் ஒதுக்கியதோடு தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடியின் மிக நெருக்கிய தோழமைக் கட்சியான அ.இ.அ.தி.மு.கவை அமைச்சரவையில் சேர்த்துக் கொள்வதைப் பற்றி அசட்டையாகவே புதிய காங்கிரஸ் தலைமை நடந்து கொண்டு வந்துள்ளது;

காங்கிரஸ் புதிய தலைமை இவ்வாறு நடந்து கொள்வதற்கு பல காரணங்கள் இருக்கலாம்; முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியும், காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாட்டு கிளைத் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தியும் அ.தி.மு. தலைவி செல்வி ஜெயலலிதாவின் கோரிக்கைகள் யாவற்றிற்கும் விட்டுக் கொடுத்து தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியைச் சிறுமைப்படுத்தி விட்டார்கள் என ஒரு பகுதி காங்கிரஸ் கட்சியினர் கருதுகின்றனர். இக் கருத்தையுடைய முன்னாள் தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் மூப்பனார் புதிய பிரதமர் நரசிம்மராவுடன் நெருக்கமான தொடர்பு கொண்டவராகையால் இப்புறக்கணிப்பு இடம் பெறுகிறதா என எண்ணவைக்கிறது?

மேலும் அ.இ.அ.தி.மு. லோக்சபாவில் கொண்டுள்ள பதினொரு ஆசனங்களும் இ. காங்கிரஸ் பெரும்பான்மைப் பலம் பெறுவதற்குப் போதுமானதாக இல்லை. இந்நிலையில் அ.இ.அ.தி.மு.கவை அமைச்சரவையில் இணைத்துக் கொள்வதில் பெரும் இலாபம் எதுவும் ஏற்பட்டு விடப் போவதில்லை. ஆகையினால், இடதுசாரிகளின் ஆதரவு பெறப்பட்டால் மட்டும் போதும் என புதிய பிரதமர் நரசிம்மராவ் செயல்படுவதாகவும் தெரிகின்றது. அ.தி.மு.கவை அமைச்சரவையில் இணைத்துக் கொள்ளும் திட்டம் இருந்திருக்குமாயின் தமிழகத்திலிருந்து ஐந்து அமைச்சர்களை நியமித்திருக்க மாட்டார் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

மேலும் தமிழக ஆளும் கட்சிக்கும் தமிழக இ. காங்கிரஸ் கிளைக்கும் இடையில் உள்ள நெருக்கமான உறவு போன்று மத்தியில் உள்ள இ. காங்கிரஸ் அரசிற்கும், தமிழக அ.தி.மு.க. அரசிற்கும் நெருக்கமான உறவுகள் இருப்பதாகத் தெரியவில்லை. உன்னிப்பாக அவதானித்தால் இதனை இலங்கை அகதிகள் விவகாரத்திலேயே கண்டு கொள்ளலாம்.

இல. அகதிகள் விவகாரத்தில் அ.இ.அ.தி.மு.கவும் தமிழக இ. காங்கிரஸினரும் காட்டும் அதி தீவிர போக்கு மத்தியில் வெளிப்படுவதாக இல்லை. இலங்கை நீண்ட அரசியல் சிக்கலும், இந்தியாவின் நலனும் இந்த அகதிகள் விவகாரத்தில் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளது என்பதை மத்தி நன்குணர்ந்துள்ளதே இதற்கான காரணமாகும். இதனை தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவும் தற்பொழுது உணர்ந்துள்ளதுபோல் தெரிகின்றது. இதன் வெளிப்பாடே முன்னர் அகதிகளை வெளியேற்றியே தீருவோம் என்று ஓங்கி ஒலித்தவர் தற்பொழுது அது மத்திய அரசாங்கத்தின் விவகாரம், சர்வதேச விவகாரம் என சற்றுத் தொனியை மாற்றியுள்ளார். இதேபோன்று காவிரி நீர் பிரச்சினையிலும் காங்கிரஸ் கட்சி ஜெயலலிதாவுக்கு ஒத்துழைப்பு நல்க மறுத்துவிட்டது;

இந்நிலையில், ராஜீவ் காலத்து இ. காங்கிரஸ் - அ.இ.அ.தி.மு.க. உறவு தொடரும் என்பதோ எதிர்க்கட்சியில்லாத சட்டசபை என ஜெயலலிதா தான் விரும்பியது போன்று தமிழக ஆட்சியைத் தொடரலாம் என்பதோ சற்று சிரமமான காரியமாகவே இருக்கும்.

# லெபனானில் பி. எல். ஓவின் ஆதிக்கம் முடிகிறது

(பெய்ரூத்)

தெற்கு லெபனானில் கடந்த நான்கு நாட்களாக நடைபெற்று வந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் பாலஸ்தீன விடுதலை இயக்கம் யுத்தநிறுத்தம் பற்றி அறிவித்துள்ளது. லெபனானில் கடந்த பல வருடங்களாக பாலஸ்தீன விடுதலை இயக்கம்கொண்டிருந்த உத்தியோகபூர்வமற்ற தன்னாதிக்கம் இந்த யுத்தத்துடன் முடிவுக்கு வந்துள்ளது.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும், லெபனான் இராணுவத்திற்கும் இடையே கடந்த நான்கு நாட்களாக நடந்த தாக்குதல்களுக்கு இந்த யுத்த நிறுத்தம் முற்றுப்புள்ளி வைத்துள்ளது. சிட்டோங் பகுதியில் இராணுவ நடமாட்டங்களை தவிர்ப்பதற்கும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினர் உடன்பட்டுள்ளனர். 1961 ஆம் ஆண்டில் லெபனானில் தளங்களை அமைக்குமாறு பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது;

**அணுவாயுத கணிப்பொறி**

## நோர்வே ஊடாக பாக். வந்திருக்கலாம்

(லண்டன்)

அணு ஆயுதங்கள் தயாரிக்கப் பயன்படும் கணிப்பொறி யந்திரங்களை நோர்வே மற்றும் பிரிட்டன் வழியாக பாகிஸ்தானுக்கு சட்டத்திற்குப் புறம்பாக ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கலாம் என்பதை பிரிட்டிஷ் சுங்கத்துறை அதிகாரிகள்தாம் விசாரித்து வருவதாக கூறியுள்ளனர்;

நோர்வே காவல்துறையினர் ஐரோப்பிய விதிமுறைகளை மீறி நுணுக்கமான இயந்திரங்களை ஏற்றுமதி செய்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் இருவரை கைது செய்ததைத் தொடர்ந்து முன்னர் கூறியவாறு பிரிட்டன் சுங்கத்துறை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

பாகிஸ்தான் அணு ஆயுதப் பரவல் தடை சட்டத்தில் கையெழுத்திடாத நாடு என்பதும், பாகிஸ்தான் அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபடுவதாக சந்தேகம் கொண்ட அமெரிக்க அரசு பாகிஸ்தானுக்கான இராணுவ உதவிகளை நிறுத்தி வைத்துள்ளமையும் தெரிந்ததே.

**ஈரானுக்கு ஏவுகணை உதிரிப்பாகம்**

## ஏற்றுமதி செய்ததாக இரு ஜப்பானியர் கைது

(டோக்கியோ)

இராணுவ ஏற்றுமதிச் சட்டத்தை மீறிய குற்றச் சாட்டின் பேரில் ஜப்பானில் இருவர் அரசாங்கத்தினால் கைது செய்யப்பட்டுள்ளனர், இது பற்றி மேலும் தெரிவருவதாவது;

சட்ட விரோதமாக ஈரானுக்கு ஏவுகணை உதிரிபாகங்களை ஏற்றுமதி செய்ததாக சந்தேகத்தின் பேரில் டோக்கியோ நகரைச் சேர்ந்த எலக்ட்ரானிக் உற்பத்தியாளர் ஒருவரை ஜப்பானிய அதிகாரிகள் விசாரணை செய்து வருகிறார்கள். ஈரானுக்கும் ஈராக்குக்கும் இடையே எட்டுவருடகாலம் யுத்தம் நடைபெற்றபோது, இவை ஏற்றுமதி செய்யப்படடதாக அதிகாரிகள் கூறுகின்றார்கள். ஜப்பானின் தலைநகரமான டோக்கியோவின் மத்தியில் அமைந்துள்ள இந்நிறுவனத்தைகடந்த வெள்ளிக்கிழமை பொலிஸார் முற்றுகையிட்டனர். இருவர் கைது செய்யப்பட்டார்கள், இராணுவதொழில்நுட்பத்தை ஏற்றுமதி செய்ததன் மூலம் ஏற்றுமதிகள் சட்டத்தை மீறியதாக அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. உதிரிப்பாகங்கள் ஹொங்கொங்கில் இருந்து கடல் மார்க்கமாக ஈரானுக்கு அனுப்பப்பட்டதாக பொலிசார் கூறுகின்றனர்.

## துவாய் இறக்குமதி மோசடி கண்டுபிடிப்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் சுங்கத்துறையினர் துவாய் இறக்குமதி சம்பந்தப்பட்ட மோசடியொன்றைக் கண்டு பிடித்துள்ளனர்: வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட துவாய்கள் நான்கு கொள்கலன்களில் இறக்குமதி செய்யப்பட்டன. இவற்றிலுள்ள துவாய்கள் அனைத்தும் கம்உதாவ கொண்டாட்டங்களில் விற்பனை செய்யப்படும் என உத்தரவாதமளிக்கப்பட்ட போதும், ஒரே ஒரு கொள்கலனிலிருந்த துவாய்கள் மட்டுமே கம்உதாவ கொண்டாட்டத்தில் விற்கப்பட்டது: ஏனையவை சலுசலாவிற்கு விற்கப்பட்டது. 16 கோடியே 10 லட்ச ரூபாய் மொத்தப் பெறுமதியுடைய இத்துவாய்களுக்கு கம்உதாவ கொண்டாட்டத்தில் விற்பனை செய்வதற்காக 33 இலட்சம் ரூபா வரிச்சலுகை அளிக்கப்பட்டு இருந்தது.

**உள்ளூராட்சி உறுப்பினர்**

## தமது கூட்டுறவுச் சங்க பதவிகளை துறக்கவேண்டும்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கத்தலைவர்கள் பணிப்பாளர்கள் ஆகியோர் இன்னும் மூன்று வாரங்களுக்குள் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படவுள்ள கூட்டுறவு சட்ட திருத்த மசோதாவின் கீழ் பணிப்பாளர் தலைவர் பதவிகளிலிருந்து விலகிவிடவேண்டும்.

புதிய கூட்டுறவு திருத்தச் சட்ட மசோதாவின் கீழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபைகளிடமே கூ. சங்கத்தின் அதிகாரம் ஒப்படைக்கப்படும் என்றும் தற்போது கூட்டுறவு கமிஷனருக்குள்ள அதிகாரங்களும் இச்சபைகளிடமே ஒப்படைக்கப்படும் என்றும் உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. விரசிங்க மல்லிமாராச்சி தெரிவித்துள்ளார்.

## பயிற்சிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு வரும் 15ஆம் திகதி காலை 9-00 மணிக்கு யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது: பாடசாலைகளில் வலைப்பந்தாட்டம் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## கரும்புலி கப்டன் மில்லரின் 4-ம் ஆண்டு அஞ்சலிக்கூட்டம்

(பருத்தித்துறை)

கரும்புலி கப்டன் மில்லர் (துன்னாலை) மேஜர் கமல் (வல்வெட்டித்துறை) வீரப்புலி வின்சென்ற் ஆகியோரது 4 ஆவது ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மாவீரர் அரங்கில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வடமராட்சி மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு மணிவண்ணன் தலைமையில் நடைபெற்றது.

கரும்புலி கப்டன் மில்லரின் தாயார் திருமதி வல்லிபுரம் குத்துவிளக்கேற்றிக் கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார். விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செயலாளர் நாயகம் திரு. யோகி விடுதலைப் புலிகள் யாழ். மாவட்டத் தளபதி திரு. காஸ்ரோ, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மக்கள் தொடர்பு, கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் திரு. பரா ஆகியோர் உரையாற்றினர்.

கரும்புலி கப்டன் மில்லர், மேஜர் கமல், வீரப்புலி வின்சென்ற் ஆகியோர் ஞாபகார்த்தமாக நடாத்தப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன;

இவ் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சாம்பியனான இளவாலை ஹென்றியரசர் விளையாட்டுக் கழகத்திற்கான சுழல் கேடயத்தை விடுதலைப் புலிகளின் வடமராட்சி விசேட இணைப்பாளர் திரு.சூசைவழங்கினார். பரிசில்களை கரும்புலி கப்டன் மில்லரின்தாயார்வழங்கினார்.

இரண்டாவது இடத்தைப் பெற்றுக் கொண்ட கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழகத்திற்கு கமல் ஞாபகார்த்த கிண்ணத்தையும், ஒவ்வொரு விளையாட்டு வீரர்களுக்கான கிண்ணங்களையும் யாழ். மாவட்டத் தளபதி திரு. காஸ்ரோ வழங்கினார். மூன்றாவது இடத்தைப்பெற்றுக் கொண்ட நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக்கழகத்திற்கான வின்சன் ஞாபகார்த்தக்கிண்ணத்தை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப்பொறுப்பாளர் திரு மருசால் அப்பா வழங்கினார் ஒரே தடவையில் கூடிய கோல்களைப் பெற்றுக் கொண்ட நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக்கழகத்திற்கான பரிசிலை விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த திரு. காமினி வழங்கினார். (25)

# தமிழின் சிறப்பும் தொன்மையும் பாடப்புத்தகத்தில் இல்லை

-சுப்பிரமணியன்

(நமது நிருபர்)

தமிழ் மொழிக்கான பாட நூல்களில் முஸ்லிம்கள் தொடர்பான பாடங்களே பெருமளவில் உள்ளடக்கப்பட்டு இருக்கின்றன. தமிழ் மொழியின் சிறப்புக்கள், தொன்மைகள் முறையாக எடுத்து விளக்கப்படவில்லை. சிங்கள இனத்தின் உண்மைக்குப் புறம்பான வரலாறுகளும் பௌத்த மதக் கருத்துக்களும் வலிந்து திணிக்கப்பட்டுள்ளன. எமது மாணவர்கள் பாடங்களின் கருத்துக்களை மனதில் நிறுத்தக் கூடிய காலமாகிய தொடக்க வகுப்புக்களின் பாடத்திட்டங்களில் எமது மாணவர்களுக்கு தேவையற்றவற்றைத் திணித்துவிட்டு தமிழ் இலக்கணத்தை உயர் வகுப்புக்களில் ஒட்டுமொத்தமாக வலிந்து திணிக்கின்ற நிலைமையைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறு நேற்றுக்காலை யாழ். பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற தமிழ்வள ஆய்வுக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் சுப்பிரமணியன் தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில், உலகில் உள்ள வேற்றுமொழியாளர்கள் எல்லாம் திருக்குறளை தத்தம் மொழிகளுக்கு மொழி மாற்றம் செய்து பயன்படுத்துகின்ற போதிலும் தமிழ் மாணவர்களுக்கு போதிய அளவில் திருக்குறள் சொல்லிக் கொடுக்கப்படாது இருட்டடிப்புச் செய்யப்படுகிறது. இத்தனைக்கும் திருக்குறள் மொழிவெறியைத் தூண்டுகின்ற நூலல்ல. அந்த நூலில் ஒரு இடத்தில் கூட தமிழ் என்றசொல் வரவில்லை.

திருக்குறளை மூன்றாம், நான்காம் வகுப்புகளிலிருந்து ஒவ்வொரு ஆண்டுப் பாடத்திட்டத்துள்ளும் சேர்த்து மாணவர்கள் திருக்குறளின் நற்பயனை முழுமையாகப் பெற வழிவகை செய்யவேண்டும்.

தமிழின் மேன்மைகளை, மாட்சியை விளக்குகின்ற சங்க இலக்கியங்கள், வடமொழிச் சொற்கள் அருகிய தூய தமிழ்ச் சொற்கள் அடங்கிய இலக்கியங்கள், பாடங்கள் பாடத்திட்டத்தில் இடம்பெற வேண்டும் என்றும் சுப்பிரமணியன் கேட்டுக் கொண்டார்.

# எமது தலைவர்களின் கைது பொறாமையின் விளைவே

- மலையக மக்கள் முன்னணி

(தலவாக்கொல)

எமது முன்னணியின் வளர்ச்சியில் பொறாமை கொண்டவர்களின் சதி காரணமாகவே எமது தலைவர்களைப் பொலிசார் கைது செய்துள்ளனர் என்று மலையக மக்கள் முன்னணியின் உப-தலைவர் சரத் அத்துகோறளையும், நிர்வாகச் செயலாளர் ஆர். எம். செல்லையாவும், சிறிலங்கா ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள தந்தியொன்றில் குறிப்பிட்டுள்ளனர்.

அதேவேளை சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் முக்கிய அரசியல் கூட்டணிப் பங்காளரான சந்திரசேகரம் கைது செய்யப்பட்டமை எதிர்க்கட்சி அணிகளுக்குள் பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது என்று கொழும்புப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

# வவுனியா அகதி முகாம் 12ஆம் திகதி இடம் மாறும்

(கொழும்பு)

வவுனியாவில் உள்ள அகதி முகாம் 12 ஆம் திகதி இடம் மாறும் என கொழும்பு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

வவுனியா நகரிலுள்ள அகதி முகாம் எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் நகரில் இருந்து நான்குமைல் தொலைவிலுள்ள எல்லப்பர் மருதங்குளத்திற்கு மாற்றப்படும் என்றும்,

தற்போது அந்த முகாமில் உள்ள 48குடும்பங்களும் புதிய இடத்திற்கு மாற்றப்படுவர் என்றும்,

அங்கு குடிதண்ணீர், குடியிருப்பு, சுகாதாரம் மற்றும் போக்குவரத்து, பாதுகாப்பு வசதிகள் செய்து கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் கொழும்புப்பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

# இரண்டாவது இதழ் 'சாளரம்' வெளிவருகிறது

(யாழ்ப்பாணம்)

மாதாந்த இளையோர் இதழ் சுவடியான "சாளரம்" இன்று வெளிவருகின்றது.

பல்வேறு துறை சார்ந்த சுவையான பல அம்சங்களுடன் இச்சஞ்சிகை வெளியிடப்பட்டுள்ளது. (ச)

# மேலும் ஒரு தமிழ் வர்த்தகர் கொழும்பில் கைது

(கொழும்பு)

கூட்டுப் படைகளின் தலைமையக குண்டுத் தாக்குதலின் சந்தேக நபரான வரதன் கொழும்பிலிருந்து மலையகத்திற்கு தப்பிச் செல்ல பயன்படுத்தியதாக கருதப்படும் சோடா லொறியின் உரிமையாளரான தமிழ் வர்த்தகர் ஒருவரைப் பொலிசார் கைது செய்துள்ளனர். அவன் சாரதியையும் இப்போது தேடி வருகின்றனர்.

இதேவேளை மலையகத்தில் அட்டன், தலவாக்கொல, நுவரெலியா பகுதிகளில் பொலிசார் தீவிர தேடுதல் வேட்டைகளை ஆரம்பித்துள்ளதுடன், பிரதான நுழைவாசல்களில் தடையுப்போடப்பட்டுள்ளது. போய் வரும் வாகனங்கள் அனைத்தும் தீவிர சோதனைக்குள்ளாக்கப்படுகின்றன. சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடுவோரும் விசாரிக்கப்படுகின்றனர்.

நாட்டின்

களையும், இனப்பிரச்சினையினை தீர்ப்பதில் அக்கறையற்ற அதன் இழுத்தடிக்கும் போக்கினையும் கண்டித்துள்ளார்.

கால எல்லை

இந்த நடவடிக்கைகளின் போது பொலிசார் அலட்சியமாக இருந்தால் அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்எனவும்சிறிலங்கா மந்திரி சபையின் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வாகன சோதனை மேற்கொள்வதற்கு உதவியாக தொண்டர்கள் சேர்க்கப்படுவர் என்றும் சிறிலங்கா அரசதரப்பு அதிகாரி தெரிவித்துள்ளார்.

பொருளாதார

ஆனால் பிரித்தானியா வழங்கும் ஆயுதங்கள் தரத்தில் மிகவும் உயர்ந்தவை. பாதுகாப்புப் படைகளின் பாவனையில் இருக்கும் வாகனங்களில் பெரும் தொகுதி பிரித்தானியாவில் இருந்து பெறப்பட்டவை. கவச வாகனமான சலாடின், பெறற் கவச்காரர்கள் இவற்றைத் தயாரிப்புக்களாகும். இவற்றிற்கான உதிரிப்பாகங்களுக்கு பிரித்தானியாவில் தான் தங்கியிருக்க வேண்டியுள்ளது. இவ்வாறு அந்த அதிகாரிகள் மேலும் தெரிவித்தார்கள்.

சிறிலங்கா

உயர்ஸ்தானிகரின் அறிக்கை கிடைத்தபிறகே அடுத்த நடவடிக்கைபற்றி அரசு முடிவு செய்யும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

பிரபல தவில்மேதை

புகழ்பெற்ற இவர் நூற்றுக்கணக்கான தவில்மேதைகளை உருவாக்கியவராவார்.

சென்னை மியூசிக் அகாடமி ஏற்பாடு செய்த தவில் கச்சேரியில் யாழ்ப்பாணம் சின்னராசா என்று பெயர் வாசிக்க மறுத்தமையால் அக்கச்சேரியில் பங்குகொள்ள மறுத்தவர். மலேசியா, சிங்கப்பூரிலும் இவரது கச்சேரிகள் நடைபெற்றுள்ளன.

அண்மையில் நடைபெற்ற முத்தமிழ் விழாவின் இறுதி நாள் உட்பட மூன்று தினங்கள் இவரது கச்சேரி நடைபெற்றது. சாவகச்சேரி நிகழ்ச்சியில் தலைவர் பிரபாகரன் அவர்களைக் கண்ட மகிழ்ச்சியில் இனி நான் இறந்தாலும் பரவாயில்லை என்று குறிப்பிட்டவர். இவரது மகளுக்கு அண்மையில்தான் திருமணம் நடைபெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மரண அறிவித்தல்

### தவில் வித்துவான் திரு. N.R. சின்னராஜா அவர்கள்

யாழ்ப்பாணம் இணுவில் தெற்கைச் சேர்ந்த இலங்கை, இந்திய, மலேசிய, சிங்கப்பூர் புகழ் லயஞான பூபதி தவில் சக்கரவர்த்தி திரு N R சின்னராஜா அவர்கள் சிவபதமெய்தினார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இணுவில் மேற்கு,
கந்தசுவாமி கோவிலடி,
இணுவில்.

தகவல்:
குடும்பத்தவர்.

(ஆர்/1523)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# பெண் தவறியிருந்தால் சிவராஜன் கொன்றிருப்பார்

(சென்னை)

சிறிபெரம்புதூரில் ராஜீவ் காந்தியை கொலை செய்த பெண் தனது முயற்சியில் தவறியிருந்தால் ஒற்றைக்கண்ணன் என அழைக்கப்படும் சிவராஜன் ராஜீவை சுட்டுக் கொன்றிருப்பார் என்று இந்திய மத்திய புலனாய்வுக் குழு தெரிவித்துள்ளது.

இதற்கென சிவராஜன் பிஸ்டல் ஒன்றை கொண்டு சென்றிருந்தார் என்றும் புலனாய்வுக்குழு தெரிவித்தது.

# சிவராஜன் நேபாளம் செல்ல முயற்சியாம்

(சென்னை)

சிறிபெரும்புதூர் குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் முக்கியஸ்தர்களான சிவராஜன், சுபா ஆகிய இருவரும் நேபாளத்திற்கு ஊடாக சிங்கப்பூர் செல்ல உத்தேசித்திருப்பதாக புதுடில்லியில் இந்தியப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட சபாபதி (வயது 70) 17 வயதான டெயின் என்னும் பெண்ணும் கூறியிருப்பதாக செய்தி ஒன்று வெளியாகியுள்ளது.

இதனிடையில் சிவராஜன், சுபா ஆகிய இருவரும் மாறுவேடம் பூண்டு இந்தியாவில் எங்காவது சுற்றிக்கொண்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கும் இந்தியப் பொலிசார் இருபது வகையான புகைப்படங்களை வெளியிட்டுள்ளனர்.

மொட்டையடித்தால் எப்படியிருப்பார், கிப்பி வைத்தால் எப்படியிருப்பார், கண்ணாடி அணிந்தால் எப்படியிருப்பார், கறுப்புக் கண்ணாடி அணிந்தால், சாமியார் வேடம் பூண்டால் எனப் பல்வேறு விதமான ஆடை அலங்காரங்களில் இந்த இருவரும் எப்படித் தோற்றமளிக்கக்கூடும் என்பதைப் பிரபல ஓவியர்களைக் கொண்டு படங்களைத் தீட்டி அவை பொது மக்களின் பார்வைக்காக விடப்பட்டுள்ளன. இதன் மூலம் இவர்களைப் பொதுமக்கள் இலகுவாக அடையாளங்காண வாய்ப்பு ஏற்படும் எனப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# இல. த. வெளிநாடு செல்ல இந்தியா உதவ வேண்டும்

-ஜனார்த்தனன்

(புதுடில்லி)

இலங்கை அகதிகள் இந்தியாவிலிருந்து நேரடியாக வெளிநாடுகளுக்கு செல்ல அனுமதிக்கப் படுகிறார்கள் இல்லை. கொழும்பு ஊடாகவே அவர்கள் தமது பயணத்தை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள். எனவே அகதிகளில் சில தரத்தினராவது நேரடியாக இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு செல்ல விரும்பினால் அவர்களை அவ்வாறு அனுமதிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களை பிறப்பிக்க வேண்டும். இவ்வாறு உலக தமிழ் இளைஞர் சம்மேளனத் தலைவர் டாக்டர் இரா. ஜனார்த்தனன் இந்தியப் பிரதமர் பி வி நரசிம்மராவிடம் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

# மைக்கல் ஸ்ரிவ் வெற்றி

(லண்டன்)

விம்பிள்டன் ரெனிஸ் போட்டியில், ஆண்களுக்கான ஒற்றையர் ஆட்டத்தில் மைக்கல் ஸ்ரிவ் நேற்று வெற்றி பெற்றார். இவரை பரிஸ் பேக்கர் எதிர்த்தாடினார்.

# ராமதாஸ் உண்ணா விரதம் பொலிஸ் குழப்பியது

சென்னைப் பனகல் பூங்காவில் காலவரையறையற்ற உண்ணாவிரதத்தை மேற்கொண்ட பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் நேற்றுமாலை பொலிசாரால் அகற்றப்பட்டுள்ளார்.

டாக்டர் ராமதாஸ் வைத்திய சிகிச்சைக்காக சென்னை அரச பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். பொலிசாரின் இந்த நடவடிக்கை 'கைது' என்று பாட்டாளி மக்கள் கட்சி வட்டாரங்கள் வர்ணித்துள்ளன. ஆனால் பொலிசார் டாக்டர் ராமதாஸ் உயிரைக் காக்க எடுத்த சட்டபூர்வ முயற்சி எனக் கூறியுள்ளனர். கட்சித் தொண்டர்களைக் கட்டுப்படுத்த பொலிசார் எடுத்த நடவடிக்கையின் போது பத்துக்கும் மேற்பட்டோர் காயப்பட்டுள்ளனர்.

இதனிடையே தமிழகத்தில் பலபாகங்களிலும் வன்முறைச் சம்பவங்கள் நடந்துள்ளன. குறிப்பாக திருச்சி மாவட்டத்தில் இரண்டு பேருந்துகள் தீயிடப்பட்டுள்ளன. சேலம் மாவட்டத்தில் மூன்று லொறிகள் தீவைத்துக் கொளுத்தப்பட்டன. கள்ளக் குறிச்சி, சின்னச் சேலம், செங்கை ஆகிய கிராமங்களுக்குச் சென்ற தமிழக அரசு பேருந்துகள் கல்வீச்சுக்கு இலக்காகின. அம்பத்தூர் அருகே சென்னைக்குவந்து கொண்டிருந்த மின்சார ரயிலுக்கு கும்பல் தீவைத்தது.

அரசு சொத்துக்கள் நாசப்படுத்தப்படுவதைத் தடுக்க தீவிர நடவடிக்கை எடுத்திருக்கும் தமிழக பொலிசார், பேருந்துகளைச் சேதப்படுத்துபவர்களைக் கண்டதும் துப்பாக்கிச் சூடு நடாத்தும்படி கடலூர் பொலிஸ் பிரிவுக்கண்காணிப்பாளர் உத்தரவுபிறப்பித்துள்ளார்.

தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி மத்திய வர்த்தகத்துறை இணை அமைச்சர் ப. சிதம்பரம், இடதுசாரி தலைவர்கள் டாக்டர் ராமதாஸ் உண்ணாவிரதத்தை கைவிட வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

போக்குவரத்து

வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது என்றும், போக்குவரத்து அமைச்சு, கொள்கை திட்டமிடல் அமைச்சு, நிதி அமைச்சு ஆகியவற்றின் சிரேஷ்ட அலுவலர்கள் மூவரும், போக்குவரத்து, பொருளாதாரம், மருத்துவம், நிர்வாகம், பொறியியல் போன்ற துறைகளில் அனுபவம் மிக்க ஐந்து நியமன உறுப்பினர்களும் இந்த ஆணைக்குழுவில் இடம் பெறுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொள்ளை

வவுனியா வர்த்தகரிடம் ராகமையில் ஒரு லட்சம் ரூபா பலவந்தமாக பறிக்கப்பட்டது.

வவுனியாவிலிருந்து புகையிரதத்தில் கொழும்பு சென்று கொண்டிருக்கையில் பலவந்தமாக ராகமையில் ஒரு கோஷ்டியால் இறக்கப்பட்டே இப்பணம் பறிக்கப்பட்டது. இவ்வியாபாரி வவுனியாவில் மதுபான வியாபாரத்தில் ஈடுபடுபவர் என்பது தெரியவந்துள்ளது.